# சங்க இலக்கியம் கூறும் அரசியல் தத்துவம்

**எம்.வி.துரைஸ் குமார்**
முனைவர்பட்ட ஆய்வாளர்
அரசியல் மற்றும் ஆட்சியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

உலக அரசியலை முறைப்படி எழுத ஆரம்பித்தாலே கிரேக்க நாகரீகத்திலிருந்து ஆரம்பிப்பது நடைமுறை பழக்கமாகவுள்ளது. வெளிநாட்டு அறிஞர்கள் மட்டுமில்லாமல் தமிழ் நாட்டு அறிஞர்களும் இதே நடைமுறையையே பின்பற்றுகிறார்கள். இதில் தவறில்லையெனினும், நம் பண்டைய தமிழ் நாகரித்தில் உள்ள அரசியல் தத்துவங்களையும் அதனுடன் சேர்த்துப் படிப்பது சாலச் சிறந்ததே. அவ்வகையில், சங்ககால தமிழகத்தின் அரசியல் தத்துவத்தை சங்க இலக்கியங்கள் வாயிலாக இந்த ஆய்வுக் கட்டுரையில் நாம் காணலாம்.

சங்க காலம் என்பது தோராயமாக கி.மு.500 முதல் கி.பி.200 வரை என்று கொள்ளலாம். முதல் சங்கத்தில் தொகுக்கபட்ட நூல்கள் எதுவும் நமக்கு கிடைக்கவில்லை. இரண்டாம் சங்கத்தில் தொகுக்கப் பட்ட நூலில் ஒன்றான தொல்காப்பியம் இப்பொழுதும் வழக்கில் உள்ளது. பத்துப்பாடும் எட்டுத்தொகையும் மூன்றாம் சங்க நூல்களாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்த முன் கூறப்பட்ட சங்க நூல்கள் சொல்லும் அரசியல் தத்துலங்களையே இக்கட்டுரையில் நாம் காணப்போகிறோம்.

சங்ககால இலக்கியங்கள், தமிழ் மக்கள் இனக் குழுக்களாகப் பிரிந்திருந்த காலக்கட்டத்தையும், படிப்படியாக போர்கள் மூலம் ஏற்பட்ட அரசு உருலாக்கத்தையும் ஓரளவுக்கு நமக்கு எடுத்துறைக்கின்றன. போர் சங்ககால மனிதனின் வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்ந்தது என கூறலாம். அதனால் தான், பல அறிஞர்கள் சங்ககாலத்தை ‘வீரயுகம்’ என்று கூறுகின்றனர். வீரம் கொண்டவனையே ஒரு ஆண் மகனாக சங்க இலக்கியங்கள் கொள்கின்றன என்று கூறினால் கூட அது மிகையாகாது. போரைப் பற்றி மட்டுமின்றி, நீதி, அரச நெறி, இராஜதந்திரம் முதலியவற்றை பற்றியும் சங்க இலக்கியங்கள் நமக்கு பறைசாற்றுகின்றன. சங்ககால அரசியல் தத்துவத்தை ஒழுக்க நெறி சார்ந்த கருத்தியல் கோட்பாடு (Idealism) எனக் கொள்ளலாம். சங்க இலக்கியங்கள்இ அரச நெறியில் இது சரி, இது தவறு என்று சில இடங்களில் மக்களுக்கு போதனை செய்தாலும், உண்மையான நிலவரத்தையும் நம் கண்முன் கொண்டுவந்துள்ளன.

## தமிழ்த் தேசியம்

தமிழ்த் தேசியச் சிந்தனை ஆங்கிலேயர் காலத்தில் தமிழ் மக்களிடையே உதித்த ஒரு சிந்தனை இல்லை. இது காலம் காலமாக,

தமிழன் மனதில் வேறூன்றி உள்ள ஒரு உணர்வு என்றே சொல்லாம். சங்க காலத்திலேயே தமிழ் உணர்வு உண்டு என்பதை தொல்காப்பியத்தின் முன்னுரையில் உள்ள

**‘வட வேங்கடந் தென்குமரி**
**ஆயிடைத்**
**தமிழ் கூறும் நல்லுலகத்து ...**

என்ற பாயிரம் ஒரு சாட்சியாகும். ஆகவே, சங்க காலமான வீரயுகத்தில் என்ன தான் குடித்தலைவர்களும், சிற்றரசர்களும், முடிவேந்தர்களும் தங்களுக்குள் ஓயாது போர் புரிந்து வந்தாலும், அவர்களுடையே இது “தமிழ் கூறும் உலகம்”, நாம் அனைவரும் தமிழன் என்ற உணர்வு இருந்தது என்றே கொள்ளலாம். குறிப்பாக, வட நாட்டில் இருந்து யாராவது படையெடுத்து வந்தால், இவர்கள் அனைவரும் ஒன்றாக (தமிழனாக) இணைந்து அவர்களை எதிர்கொண்டனர். இதை, கலிங்கத்து அரசன் காரவேலனின் கல்வெட்டு உறுதி செய்கிறது. அதில் அவன் 113 ஆண்டுகளாக இருந்த ‘தமிழர் கூட்டணியை’ அவன் முறியடித்து தமிழகத்தைப் பிடித்ததாகக் குறிப்படுகிறான். அவனது காலம் கி.மு. 165. ஆகவே மாமன்னர் அசோகன் காலந்தொட்டு அந்த ‘தமிழ் மன்னர் கூட்டணி’, அந்நியப் படையெடுப்பை எதிர்த்து நம் மண்ணில் அமைந்திருந்தது என்பது புலனாகிறது. இந்த கருத்தை அகநானூற்றுப் பாடலும் உறுதிசெய்கிறது.

**வென்றியொடு ...**
**தமிழ் கெழு மூவர் காக்கும்**
**மொழிபெயர் தேஎத்த பல்மலை** **(அகம் 31:12, 14:15)**

**அரச நெறி**

‘அரசு’ என்ற கருத்துப்படிவம் சங்ககால இலக்கியங்களில் காணப்படவில்லை. சங்ககாலத்திற்கு சற்று பின்னே வந்த திருவள்ளுவர், ‘அரசு’ மற்றும் அதன் அங்கங்கள் பற்றி ஓரளவு நமக்கு தத்துவார்த்த அடிப்படையில் தெரிவித்திருந்தாலும், சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ‘அரசு’ என்ற கருத்துப்படிவத்தைப் (concept) பற்றி பெரிதளவில் பேசவில்லை. ஆனால், அரசனின் நெறிகள் பற்றிய பல்வேறு கருத்துகள் சங்க இலக்கியங்கள் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. சங்க இலக்கியங்களை விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்தால், அரச உருவாக்கம் பற்றியும் நாம் ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம். சங்க இலக்கியங்கள் சிறு மற்றும் குறுநில மன்னர்கள் எவ்வாறு தங்களுக்குள் போர் புரிந்து கொண்டனர் என்றும், மெது மெதுவாக எவ்வாறு மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் தங்களின் செல்வாக்கை தமிழ் நிலப்பரப்பில் நிலை நாட்டினார்கள் என்பதையும், அதன்மூலம் எப்படி வலுவான ‘அரசு’ உருவானது என்பதைப் பற்றியும் தெளிவாக உரைக்கின்றன. காலத்தால் முற்பட்ட சங்கப் பாடல்கள் அரசனின் வரிகள் பற்றி கூறவில்லை. ஆனால், காலத்தால் பிற்பட்ட சங்கப்பாடல்கள் சுங்கவரி, நுழைவு வரி, வருமான வரி முதலியவைப் பற்றி கூறுகின்றன. வரியே ஒரு வலுவான அரசுக்கு மையத்தூண் என்ற கருத்து சங்ககால மக்களிடையே வலுப்பெற்றிருந்தது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

சங்க இலக்கியங்கள் ‘அரசு’க்கும் ‘அரசனுக்கும்’ உள்ள வேறுபாட்டை கருத்தியல் அடிப்படையில் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் ‘மன்னராட்சி’ முறை மட்டுமே சங்ககால மக்களுக்கு பரிச்சயமாக இருந்தது. உயர்குடி குழு ஆட்சியோ (Aristocracy), மக்களாட்சியோ (Democracy). சங்ககால மக்களுக்கு பரிட்சயமாக இருந்ததுக்கு இதுவரை நமக்குத் தரவுகள் கிடைக்கவில்லை என்றே கூறலாம். அதே நேரத்தில், ஒரு அரசு எவ்வாறு இயங்க வேண்டும், ஒரு அரசன் எவ்வாறு நடுந்துகொள்ள வேண்டும் என்ற கருத்துக்கள் சங்க இலக்கியம் முழுவதும் பரவி கிடக்கின்றன. அவற்றை இப்பொழுது காணலாம்.

ஒரு அரசனின் முக்கியத் தேவைகளில் ஒன்று கோட்டை என்று பல்வேறு சங்கப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. கோட்டையைக் கொண்ட ஒரு அரசன் தான் தன் எதிரிகளிடம் இருந்து தன் மக்களை காத்தருள முடியும் என்றும்; ஆகவே கோட்டை மிகவும் அவசியம் என்ற கருத்தையும் நாம் காண முடிகிறது. புறநானாறு, சங்ககாலத்தில் காடுகளில் எவ்வாறு கோட்டைகளாக செயல்பட்டு குடிகளைக் காத்தது என்பது பற்றியும் கூறுகிறது. அதே போல், எதிரிகளை அழித்து மக்களை காப்பதும் முக்கிய அரச நெறியாகக் காணப்படுகிறது. புறநானூற்றில் உள்ள நானூறாவது பாடலில் ஔவையார், எதிரிகளை வென்று வருபனே தேர்ந்த அரசன் என்று கூறுகிறார்.

மன்னர்களின் ஈகைதிறன் சங்க இலக்கியங்கள் முழுவதும் புகழப்படுவதில் இருந்து, அது ஒரு முக்கிய அரச நெறியாக விளங்கியது என்று எடுத்துக்கொண்டால் அது தவறாகாது. அதே போல், நீதி தவறாமல் ஆட்சி புரிபவனே உண்மையான அரசன் என்ற கருத்தையும் பல்வேறு சங்கப்பாடல்களில் காணலாம். புறநானூற்றுல் உள்ள முன்னூற்றி அறுபத்தி ஏழாம் பாடலில் நல்ல செயல்கள் செய்யும் அரசனுக்கு ‘இறவாப்புகழ்’ கிட்டும் என்று கூறப்பட்டுள்ளதில் இருந்து, நல்ல செயல்களும், நீதி தவறாமையும் ஒரு முக்கிய அரச நெறியாக கொள்ளப்பட்டது என்பது தெளிவாகிறது.

முன்னே கூறப்பட்ட, அதே புறநானூற்றில் உள்ள நானூறாவது பாடலில் ஔவையார் தன் மக்களின் பசியைத் தீர்ப்பவனே உண்மையான அரசன் என்று கூறியுள்ளார். சங்ககாலத்தில் மட்டுமல்ல எந்த காலத்திலும் உண்மையாகக் கொள்ளவேண்டிய அற்புதமான கருத்து இது என்றால் அது மிகையாகாது.

மேல்கூறப்பட்டவை சங்ககாலத்தில் அரசனின் நெறிகளாக போற்றப்பட்டவை. சங்ககால மன்னராட்சியில் சாதாரான குடிமகன் மன்னன் ஆக முடியாது என்றாலும், மன்னரின் வம்சாவழியே மன்னர்களாக திகழ முடியும் என்றாலும், அவன் முன் கூறப்பட்ட அரச நெறிகளை பின்பற்றினால் மட்டுமே மக்களால் மன்னனாக மதிக்கப்படுவான். அப்படி நெறி தவறி நடந்தால், மக்களின் ஆதரவை இழந்த ஒரு கொடுங்கோலனாக காலந்தள்ளலாமே தவிர, ஒரு மன்னராக செல்வாக்குடன் வாழ முடியாது.

### போர்

சங்ககால அரசியலில் போர் ஒரு முக்கிய அங்கம் வகித்தது. முன்னே கூறியது போல், தைரியத்துடன் போர் புரிந்து எதிரிகளை வென்று வருபவனே அரசன் என்ற கருத்து பரவியிருந்தது அரசனுக்கு மட்டுமல்ல, அனைத்து ஆண்களுக்கும் வீரமும், போரில் வெற்றியும், இல்லையேல் வீரமரணமும் ஆண்மையின் இலக்கணமாக பார்க்கப்பட்டது. இதை புறநானூற்றுள் ஒரு பாடல் அழகாகக் கூறுகிறது. தன் மகன் முதுகிலே குத்துப்பட்டு இறந்தான் என்பதை கேள்விப்பட்ட தாய், அதை உறுதி செய்து, அது உண்மையென்றால் அவனுக்கு பாலூட்டிய தன் மார்பை அறுத்து எறிய போர்களத்துக்கு சென்றதாகவும், அங்கே தன் மகன் மார்பில் புண் பெற்று இறந்து கிடப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்ததாகவும் கூறுகிறது. மகன் இறந்ததைப் பற்றிக் கவலைப்படாமல் அவன் மார்பில் புண் கொண்டு இறந்ததைக் கண்டு தாய் பெருமகிழ்ச்சி அடைந்தாள் என்ற செய்தி, வீரத்திற்க்கும், போருக்கும் சங்ககாலத்தில் இருந்த மரியாதையை உறுதி செய்கிறது. அதேபோல் சங்ககால மக்களின் போர்முறை இரக்கவுணர்சி அடிப்படையிலேயே அமைந்து இருந்ததாக ஒரு புறநானூற்றுப் பாடல் மூலம் அறிகிறோம். அதில், போர் தொடுக்கும் முன்னே, எதிரியின் நாட்டிலுள்ள பசுக்களையும், அந்தணர்களையும், பெண்களையும் நோய்வாய் பட்டவர்களையும், மகனில்லாதவரும் பாதுகாப்பான எடத்திற்க்கு செல்லுமாறு ஒரு பாண்டியன் பறையறைவித்தான் என்ற செய்தி கூ

**ஆவும், அனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறா ஆ தீரும், -**
**எம்மம்பு கடுவிடுதும், - நும்மரண் சேர்மின் என**
**அறத்தாறு நுவலும் பூட்கை.**

இதன் மூலம் சங்ககாலத்தில் போரின் இலக்கணமும், தத்துவுமும் எவ்வளவு நாகரீகமாக இருந்தது என்பதை அறியமுடிகிறது.

### முடிவுரை

சங்ககாலத்தின் அரசநெறியும், போர்த்தத்துவமும் ஒழுக்கநெறி சார்ந்தே இருந்தது என்பது இதன் மூலம் புலனாகிறது. சங்க இலக்கியங்கள், முறையற்ற நேரங்களில் போர் வரும் போது எவ்வாறு இராஜதந்திரிகள் செயல்பட்டு போரைத் தடுத்து நிறுத்தி, போரால் அவதிப்பட இருந்த மக்களைக் காத்தனர் என்றும் கூறியுள்ளன. சங்க இலக்கியங்கள் கூறும் அரசியல் தத்துவங்கள் காலத்தால்

அழியாதவை மட்டுமின்றி, எந்தக் காலத்திற்கும் பொருந்தக்கூடியவை என்று கூறினால் அது மிகையாகாது.

**குறிப்புகள்**

1. பாலசுப்பிரமணியன், உல. (2006). ‘‘சங்க இலக்கியம்: ஓர் எளிய அறிமுகம்’’. பாரதி புத்தகாலயம்: சென்னை.
2. பத்மாவதி, ஆ. (2003). ‘‘சோழர் ஆட்சியில் அரசும் மதமும்’’. குமரன் பப்ளிஷர்ஸ்: சென்னை. பக்கம் 15.
3. இந்த முன்னுரை பிற்காலத்தில் ‘பனம்பாரனாரால்’ எழுதப்பட்டது என்றும் கூறுவர். பார்க்க கா.விசயரத்தினம் எழுதிய ‘‘தொல்காப்பியர் காட்டும் பண்டைத் தமிழர் வாழ்க்கை நெறி’’ என்னும் கட்டுரையை.
4. சங்க இலக்கியங்களில் வரும் ‘ஆரியர்’ என்ற சொல் ‘அந்நியர்’ என்றப் பொருளிலேயே பயன்படுத்தபட்டுள்ளது.
5. டாக்டர் பத்மஜா ரமேஷ். வி.பி. புருஷோத்தமன் (2000) ‘‘சங்ககால மன்னர்களின் காலநிலை’’- தொகுதி 1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்: சென்னை, பக்கம் 43
6. திருவள்ளுவர் சங்ககாலத்தைச் சேர்ந்தவர் என்ற கருத்து இன்று மிகவும் வலுபெற்றிருக்கிறது. இருந்தாலும், திருக்குறளை ‘பிற்ச்சங்ககால’ இலக்கியமாகப் பார்ப்பதே உகந்தது
7. கோ, மன்னன், …….. என்ற சொற்கள் சிறு, மற்றும் குறுநில மன்னர்களைக் குறிப்பதாக சங்க இலக்கியங்களில் அமைந்துள்ளது. ‘வேந்தன்’ என்ற சொல், மூவேந்தர்களிர் ஒன்றான சேர, சோழ, பாண்டிய மன்னர்களையே குறிக்கும்
8. புறநானூற்றில் உள்ள இருநூற்றி எழுபத்தி எட்டாம் பாடல். அது காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடிய பாடல்.
9. அருணாசலம், மு. ‘‘புறநானூறு: தமிழர் பண்பாடு’’. (2013). நியூ செஞ்சரி புக் ஹவுஸ்: சென்னை, பக்கம், 10.
10. சங்கப்பாடல்கள் மூலம் சங்ககாலத்தின் புகழ்பெற்ற இராஜதந்திரியாக ஔவையார் செயல்பட்டார் என்பது தெரிகிறது.